மனனம் செய்ய
இந்த வார வசனம்:

...நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது எவற்றையெல்லாம் கேட்பீர்களோ அவற்றைப் பெற்றுவிட்டீர்கள் என நம்புங்கள்; நீங்கள் கேட்டபடியே நடக்கும்.

(மாற்கு 11: 24)

விடுதலைப் பயண நூலில் அமலேக்கியர்களுக்கு எதிரானப் போரில் இஸ்ராயேலர் வெற்றிபெறும்வரை மோசே கைகளை உயர்த்தி (அவருடைய கைத்தடியை கடவுளை நோக்கி உயர்த்துவது போல) கடவுளிடம் இறைவேண்டல் செய்தார் என்று வாசிக்கிறோம். மோசே சோர்வடைந்தபோது, அவருக்குப் பின்புறம் ஒரு பாறையை வைத்து அவரை அதில் அமரச்செய்து, ஆரோனும், கூரும் மோசேவின் கைகளைத் தாங்கிக்கொண்டார்கள்.

இதுபோன்ற ஒரு செயல்தான் நம்பிக்கையைப் பொறுத்தமட்டில் நம் சமூகத்திற்குத் தேவை. இறைவேண்டலில் உறுதியாக இருத்தல். ஒருவரை ஒருவர் சார்ந்திருத்தல், மற்றும் விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவரிடமிருந்தே எனக்கு உதவி வரும் என்று ஆண்டவர் மீது நீடித்த நம்பிக்கைக் கொண்டிருத்தல் ஆகியவை இருத்தல் வேண்டும்.

நாம் எவ்வாறு உறுதியாக இருந்து, கடவுள் மீது நம்பிக்கை வைப்பது? புனித பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய கடிதத்தில் (2 தீமோ3:14, 3:2) இதைச் சுட்டிக்காட்டுகிறார். 'மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது; அது கற்பிப்பதற்கும், கண்டிப்பதற்கும், சீராக்குவதற்கும், நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது. இவ்வாறு கடவுளின் மனிதர் தேர்ச்சி பெற்று நற்செயல் அனைத்தையும் செய்யத் தகுதி பெறுகிறார்'. தீமோத்தேயுவுக்கு குழந்தைப் பருவம் முதல் நம்பிக்கைக் கற்பிக்கப்பட்டதுபோல, நமக்கும் கடவுளுடைய வார்த்தைக்கு உண்மையாக இருக்கவேண்டும் என்று பவுல் நமக்குக் கற்பிக்கின்றார்.

மிகப்பெரிய மனமாற்றத்தின் வரலாறு என்றால் அது புனித அகுஸ்தினாரைப் பற்றியது தான். (கிபி 354 - 430) அவரது தாயார் அவரை ஒரு கிறிஸ்தவராக வளர்த்தார். ஆனால் அவர் நல்ல கிறிஸ்துவ நம்பிக்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை. தாய் மோனிக்கா அவருக்காக பொறுமையோடும், மென்மையோடும் பல சோதனைகளைத் தாங்கிக்கொண்டு, இடைவிடாது மன்றாடியதால், அவருடைய 33 ஆவது வயதில் அகஸ்டின் மனமாற்றம் அடைந்தார். உள்ளத்தின் போராட்டங்களையும் அகஸ்டினின் மனமாற்றத்தையும் அவருடைய வாக்குமூலங்கள் (confessions) என்னும் புத்தகத்தில் இருந்து வாசித்து அறியலாம்.

இந்த வார்த்தைகள் புனித அகுஸ்தினாரின் இறைவேண்டல்; ' நீர் உமக்காக எங்களை உண்டாக்கினீர். உம்மில் நாங்கள் வந்து சேரும்வரை எங்கள் இதயம் அமைதியடையாது' நாமும் இந்தக் காலக்கட்டத்தில் அமைதியற்ற நிலையில் இருக்கிறோம். இறைவனிடம் இடைவிடாமல் மன்றாடி, அவரில் நிலைத்திருப்போம். ஆயினும் மானிடமகன் வரும்போது மண்ணுலகில் நம்பிக்கையைக் காண்பாரோ? என்னும் வார்த்தைகளைக் கூறும்போது, நம்மால், 'ஆம்' என்று பதில் கொடுக்க விரும்புவோம்.

கிறிஸ்துவின் அமைதி நம் உள்ளங்களை நிரப்புவதாக. ✣

### இன்றைய வாசகங்கள்:

விடுதலைப் பயணம்: 17: 8-13;

திபா: 121: 1-8;

2 தீமோத்தேயு 3: 14-4:2;

லூக்கா: 18: 1-8.

INTERNAL CIRCULATION ONLY
BUL 42/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

16 அக்டோபர் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 29 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:
**செபமாலை அன்னையின் தினம் (07-10-2022)**

# இடைவிடாமல் இறைவேண்டல் செய்யுங்கள்; மனம் தளராதீர்கள்

இன்றைய நற்செய்தியில் கைம்பெண் எவ்வாறு நடுவரின் கவனத்தைத் தன்பக்கம் திருப்பினார் என்ற உவமையை எடுத்துக்கூறுவதன் வழியாக, இயேசு தம்முடைய போதனையில் நம்பிக்கையும் விடாமுயற்சியும் தேவை என்பதைக் காட்டுகிறார். நம் வாழ்க்கையில் சவால்களை எதிர்கொள்ளும்போது, நாம் எளிதில் மனம் தளர்ந்து போய்விடுவோம் என்பதை அறிந்துள்ளார் ஆண்டவர். ஆனால் நற்செய்தியில் கூறுவதுபோல, **நாம் எந்த அளவிற்கு இறைவனின் மீதும் ஒருவர் மற்றவர் மீதும் நம்பிக்கைக் கொண்டிருக்கின்றோமோ அந்த அளவிற்கு நம்முடைய அனைத்து முரண்பாடுகளையும் நம்மால் சமாளிக்க இயலும்.**

